<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 323/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருதவாணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வேலாயுதம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

<u>முதல் விசாரணை</u>

1. நான் உடுமலை கணபதி பாளையத்தில் வசித்து வருகிறேன். முக்கோணத்தில் வெல்டிங் ஒர்க்ஷாப் வைத்துள்ளேன். எனக்கு மகன் –1 மகள் –1 . இருவருமே திருமணமாகி கோவையில் உள்ளார்கள். 05.01.2025 ம் தேதியன்று காலை 7.00 மணிக்கு கோவையில் உள்ள என் மகன் வீட்டிற்கு போவதற்காக எனது வீட்டை பூட்டி விட்டு சென்றோம். 06.01.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். கதவை திறந்து வீட்டிற்குள் சென்றோம். முதல் பெட்ரூம் நார்மலாக இருந்தது. இரண்டாவது பெட்ரூமில் சென்று பார்த்த போது பீரோ திறந்திருந்தது. கீழே மிளகாய் தூள் சிந்தி கிடந்தது.
2. பீரோவில் வைத்திருந்த 2 பவுன் செயின் –2 ½ பவுனில் மோதிரம் –2 கம்மல் –2 செட் சுமார் 1 பவுன், வெள்ளி விநாயகர் சிலை மற்றும் குத்துவிளக்கு 100 கிராம் அளவில் மற்றும பணம் ரூ 1,00000/– திருடு போயிருந்தது. எங்கள் வீட்டின் ஓடு மாறி இருந்தது அதனால் ஓட்டை பிரித்து வீட்டிற்குள் இறங்கி திருடி சென்று விட்டார்கள். என்னிடம் காட்டப்படும்புகார் நான் எழுதி யது நான் தான். நான் தான்

புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அசா.ஆ.**1** என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள்.

3. 6 வது மாதத்தில் திவான் என்பவர் திருடியதாக போலிசார் தெரிவித்தார்கள் . நான்அவரை பார்க்கவில்லை. நகையை அடையாளம் காட்டினேன். நகைகளை கனம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். அந்த நகைகைளை கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன்.
4. தங்க செயின் – 2 எண்ணிக்கை அசா.பொ.1 என்றும், மோதிரம் –2 எண்ணிக்கை அசா.பொ.2 என்றும், கம்மல் –1 செட் அசா.பொ.3 என்றும், வெள்ளி குத்துவிளக்கு அசா.பொ.4 என்றும், வெள்ளி விநாயகர் சிலை அசா.பொ.5 என்றும் குறியீடு செய்யப்படுகிறது. தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை குறியீடு செய்த பின் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது. நகைகளின் புகைப்படம் அசா.ஆ.**2** என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். பணம் ரூபாய் ஒரு லட்சத்தை எதிரி சேவல் சண்டையில் செலவு செய்து விட்டதாக போலீசார் தெரிவித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நகைகள் காணாமல் போனதாக சொல்லி உள்ள நிலையில் அந்த நகைகள் எந்த காலகட்டத்தில் வழங்கப்பட்ட நகைகள் என்றால் இரண்டு மூன்று வருடத்திற்கு முன்பு இருக்கும். அந்த நகைகள் நகைகளுக்கான பில்களை போலீசார் விசாரணையிலோ அல்லது நீதிமன்றத்திலோ ஒப்படைதீர்களா என்றால் இல்லை, பில்கள் இல்லை. வெள்ளிப் பொருட்கள் வாங்கிய எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 1 1/2 வருடம் இருக்கும்.
2. புகாரில் வெள்ளி மற்றும் தங்க நகைகள் எப்போது வாங்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். காணாமல் போன நகைகள் மாடலின் விவரம் குறித்து புகாரில் விளக்கமாக சொல்லவில்லை என்றால் ஆமாம். உங்களது நகைகள் என்று சொல்லப்படும் நகைகள் மிகவும் புதிய நகைகளாக உள்ளது என்றால் உபயோகிக்காமல் வீட்டில் வைத்திருப்போம். இது உங்களது நகைகள் அல்ல என்றால் சரியல்ல. நீங்கள் பணம் வைத்த ஒரு லட்சம் பணம் வைத்திருந்ததாக சொல்லியுள்ள நிலையில் என்ன டினாமினேஷன் என்றாலும் எத்தனை ரூபாய் நோட்டுகள் என்று புகாரியிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் ஆமாம்.
3. புகார் கொடுக்கும் பொழுது உங்களது வீடு ஓட்டு வீடு என்பது போல்

புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். உங்களது வீட்டுக்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். நீங்கள் கோவை சென்றதாக சொல்லியுள்ள நிலையில் கோவை சென்ற விபரம் உங்களது வீட்டிற்கு அருகில் குடியிருப்பவர்களுக்கு உறவினர்களுக்கும் தெரியும் என்றால் தெரியாது. பொதுவாக வெளியூர் செல்வதாக இருந்தால் உறவினர்களுக்கும் பக்கத்து வீட்டு இருப்பவர்களுக்கும் தகவல் சொல்லுவது வழக்கம் என்றால் நாங்கள் அதுபோல் சொல்லுவதில்லை.

4. சாட்சிகள் பட்டியலில் உள்ள பிரபு எனது மகன் தனலட்சுமி எனது மனைவி, பிரபாகரன் என்பவர் எனது மகனின் நண்பர், ராமசாமி எனது பக்கத்து வீட்டுக்காரர், சதீஷ்குமார் அவரும் அருகில் குடியிருப்பவர், கார்த்திக் பின்புறம் வசிப்பவர். முகமது சபீக் என்பவரை தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.
5. நீங்கள் சம்பவம் நடந்த உடன் புகார் கொடுக்கவில்லை என்றால் உடனடியாக கொடுத்தேன். எத்தனை மணிக்கு இந்த சம்பவம் குறித்து தெரிந்து கொண்டீர்கள் என்றால் 10.00 மணிக்கு வீட்டிற்குள் சென்று பார்த்த பொழுது தெரிந்து கொண்டேன். காவல் நிலையத்திற்கு போன் மூலம் தகவல் சொல்கிறீர்களா என்றால் 100 க்கு முதலில் போன் செய்தேன்.
6. 100 க்கு போன் செய்ததும் காவல்துறை சம்பந்தப்பட்ட நபர்கள் வந்தார்கள் என்றால் ஆமாம். அதற்கு பின்னே தான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தீர்களா என்றால் மாலை சென்று கொடுத்தேன். மாலை எத்தனை மணி இருக்கும் என்றால் 6.00–7.00 மணி அளவில் கொடுத்தேன். 100 க்கு போன் செய்து போலீஸ் வந்தபோது விசாரித்தார்களா அல்லது அதன் பின்னிட்டு வேறு போலீசார்கள் வந்து விசாரித்தார்கள் என்றால் அப்பொழுதும் வந்தார்கள் மதியமும் வந்தார்கள். போலீசார் வந்து பார்த்து சென்ற பிறகுதான் புகார் கொடுத்தீர்கள் என்றால் ஆமாம்
7. உங்களது மனைவியினுடைய மகளுடைய கைரேகையை பெற்றார்களா என்றால் பெற்றார்கள் அங்கு கைரேகையும் எடுத்தார்கள். கைரேகை நிபுணர்கள் வந்தார்களா என்றால் கைரேகை நிபுணர் என்று வந்து பார்த்து விசாரித்தார்கள். இது போன்ற விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அவர்கள் சொல்லி தான் வந்தார்கள். வழக்கு சொத்துக்கள் உங்களுடையது இல்லை என்றாலும் நீங்கள் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

8. ஓடு பிரித்து இறங்குவது ஒரு நபரால் செய்ய இயலாது என்றால் இரண்டு மூன்று நபர்கள் வந்தார்கள், இருந்ததா என்றால் எத்தனை பேர் வந்தார்கள் என்று யூகம் செய்து கூற இயலாது.
9. அன்றைய தினம் விசாரித்த பின்னிட்டு போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 323/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மருதவாணன் | ஜாதி | |
| கிராமம் | : | | இனம் | |
| தாலூக்கா | : | | வயது | |
| Mail ID | : | | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

அவர் எங்கேமுதல் விசாரணை

நான் உடுமலை கணபதி பாளையத்தில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். அசா.1 எனது கணவர் ஆவார். வெல்டிங் ஒர்க் ஷாப் வைத்துள்ளார். ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர் அவர்கள் இருவரும் திருமணம் ஆகி கோயம்புத்தூரில் உள்ளார்கள். 05.01.2025 ம் தேதியன்று காலை 7.00 மணிக்கு கோவையில் உள்ள என் மகன் வீட்டிற்கு போவதற்காக எனது வீட்டை பூட்டி விட்டு சென்றோம். 06.01.2025 ம் தேதி காலை 9.30 – 10.00 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். கதவை திறந்து வீட்டிற்குள் சென்றோம். முதல் பெட்ரூம் நார்மலாக இருந்தது. இரண்டாவது பெட்ரூமில் சென்று பார்த்த போது பீரோ திறந்திருந்தது. கீழே மிளகாய் தூள் சிந்தி கிடந்தது. பீரோவில் வைத்திருந்த 2 பவுன் செயின் –2 ½ பவுனில் மோதிரம் –2, கம்மல் –2 செட் சுமார் 1 பவுன், வெள்ளி விநாயகர் சிலை மற்றும் குத்துவிளக்கு 100 கிராம் அளவில் மற்றும் நகைகள் மொத்தம் 6 பவுன் இருக்கும். வெள்ளி நகை 100 கிராம் இருக்கும். உடனே எனது கணவர் 100 க்கு போன் செய்தார். அசா.1 இதுசம்பந்தமாக புகார் கொடுத்தார். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். 6

பவுன் மற்றும் வெள்ளி 100 கி ராம் கிடைத்தது. யார்எடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது. என் வீட்டில்திருடுபோன அனைத்து பொருள்களும் கிடைத்து விட்டது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. திருடுபோன நகைகள் எந்த காலகட்டத்தில் வாங்கப்பட்டது என்றால் இரண்டு மூன்று வருடம் இருக்கும். யாருக்காக வாங்கப்பட்டது என்றால் என் மகனின் திருமணத்திற்காக வாங்கியது. அதற்கான பில்கள் உள்ளதா என்றால் இல்லை. 100 க்கு போன் செய்து போலீஸ் வந்ததும் வந்த பின்னிட்டு போலீஸ் வரவில்லை என்றால் போலீஸ் ஒரு மணிக்கு மேல் வந்தார்கள். அதற்கு பின்னிட்டு வரவில்லை என்றால் ஆமாம். உங்கள் வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம்
2. உங்கள் வீட்டில் ஓட்டை பிரித்தால் பக்கத்து வீட்டில் சத்தம் கேட்கும் என்றால் கேட்கவில்லை என கூறினார்கள். உங்களது பீரோ சாவி வீட்டினுள் வைப்பீர்கள் என்றால் ஆமாம். வெளியூர் சென்றால் பீரோவை பூட்டி சாவியை எடுத்து செல்வார்கள் என்றாலும் வீட்டில் வைத்து விட்டு செல்ல மாட்டார்கள் என்றாலும் ஊருக்கு செல்லும் அவசரத்தில் விட்டு விட்டோம். உங்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். எப்பொழுது விசாரித்தார்கள் என்றால் அப்பொழுதே கேட்டார்கள். அதன் பின்னிட்டு உங்களை போல விசாரிக்கவில்லை என்றால் ஆமாம்.
3. குறிப்பிட்ட நகைகள் யார் வாங்கியது என்றால் நானும் தான் உடன் சென்றிருந்தேன். இந்த நகைகளை வேறு எந்த சூழ்நிலையிலும் அடையாளம் காட்டவில்லை என்றால் நான் அடையாளம் காட்டினேன். எங்கு அடையாளம் காட்டினீர்கள் என்றால் நீதிமன்றத்தில் வாங்கும் போது அடையாளம் காட்டினேன். காவல் நிலையத்திற்கு சென்று அடையாளம் காட்டினீர்களா என்றால் இல்லை. போலீசார் எந்த சூழ்நிலையிலும் உங்கள் விசாரிக்கவில்லை என்றாலும் கணவர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றாலும் அவைகள் உங்களது நகைகள் இல்லை என்றாலும் சரி அல்ல

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.323 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ராமசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : மாரியப்பன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் அசா.1 மருதவாணன் வீட்டிற்கு பக்கத்தில் கணபதிபாளயைத்தில் வசித்து வருகிறேன். கால் டாக்ஸி ஓட்டி வருகிறேன். கடந்த 05.01.2025 ம் தேதி நான் எனன் வீட்டில் வெள்ளை அடித்துக் கொண்டிருந்தேன் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஊருக்கு சென்றிருந்தார்கள். அன்று இரவு ஒரு மணி ஆகிவிட்டதால் அலுப்பில் துாங்கி விட்டேன். மறுநாள் காலையில் எனது மனைவிக்கு சர்க்கரை நோய் சம்பந்தமாக பரிசோதனைக்கு வேண்டி உடுமலைப்பேட்டை நகருக்கு வந்து விட்டேன் . 11.30 மணி அளவில் போலீசார் என்னை அழைத்தார்கள். மருதவாணன் வீட்டில் திருடு போன விஷயம் தெரியுமா என்று கேட்டார்கள். எனக்கு தெரியாது என்று கூறுகிறேன். பின்னர் 10 நிமிடத்தில் கணபதிபாளையம் வருவதாக தெரிவித்தேன். போலிசார் மருதவாணன் வீட்டிற்குள் சென்ற போது முன்புறமா ஹால் இருந்தது. மேல் புறமாக பெட்ரூம் இருந்தது. போலீசார் அதனை டேப் வைத்து அளந்தார்கள். போலிசார் வரைந்து மற்றும் கட்டம் வரைந்த கையெழுத்து கேட்டார்கள். நானும் சதிஷ்குமாரும் சாட்சி கையொப்பம் செயதோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து

என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீங்கள் சொல்லும் பகுதியில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மருதவாணனை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 25 வருடமாக தெரியும், இருவரும் மில்லில் வேலை செய்து வந்தோம். 05.01.2025 ம் தேதி அன்று நள்ளிரவு ஒரு மணி வரை உங்கள் வீட்டில் வேலை செய்து வந்தீர்கள் என்றால் பூசு வேலை செய்து கொண்டிருந்தோம். உங்கள் பக்கத்து வீட்டில் சம்பவம் நடக்கும் பொழுது சத்தம் கேட்க உங்களுக்கு வாய்ப்புள்ளது என்றால் அசதியில் தூங்கி விட்டேன்.
2. 06.01.2025 ம் தேதி 11.00 மணிக்கு போலீசார் அழைத்ததும் நீங்கள் சென்றீர்கள் என்றால் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்தில் நேரத்தில் சென்று விட்டேன்.
3. நீங்கள் கால் டாக்ஸி ஓட்டும் நிலையில் 06 ம் தேதி அன்றைய தினம் வேலைக்கு செல்லவில்லை என்பது ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல, சுகர் செக்கப் செய்ய மனைவியை அழைத்து சென்றேன். போலீசார் விசாரணையில் நீங்கள் மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் பகலில் வீட்டில் இருந்த பொழுது போலீசார் வந்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் இல்லை, நான் உடுமலைப்பேட்டையில் இருந்தேன் . சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இல்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டீர்கள் என்றாலும் இல்லை எங்கள் வீட்டின் முன் வைத்து தான் கையொப்பம் செய்தேன்.
4. கையெழுத்து போட்டா அவனை அதில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் டேப் வைத்து வரைந்தார்கள். நீங்கள் அன்றைய தேதியில் வீட்டில் இல்லை என்றாலும் மருதவாணன் உங்களது நீண்ட கால நண்பர் என்பதால் அவருக்கு அனுசரணையாக போய் சாட்சி மொழிகிறீர்கள் என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் சரியல்ல

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.